www.padippakam.com



இறக்கைகள் தரிக்க
முனையும் நமக்கு
வேர்களகற்றி வாழ்தல்
எப்படி சாத்தியம்?
வேர் பிடுங்கப்பட்ட ஒரு
பூச்செடியிலிருந்து
உதிர்ந்து விழுந்த
ஒரு மலராய் தர்மினி தன்
வார்த்தைகளுடே
ஈழத்து நினைவுகளையும்
எரிதழற் கங்குகள்
போன்ற கவிதைகளால்
போருக்கெதிரான தனது
கோபத்தையும் கூறிச்
செல்கிறார். இவரது
கவிதைகளில் வசப்படும்
புலம்பெயர் தமிழரின்
ஆன்மா நம்மை உறக்கம்
துறக்கச் செய்வது.

மோனிகா

கருப்புப் பிரதிகள்



# சாவுகளால் பிரபலமான ஊர்

தர்மினி

படிப்பகம்

www.padippakam.com

**சாவுகளால் பிரபலமான ஊர்**

**தர்மினி**

முதற் பதிப்பு : ஆகஸ்ட் 2010

வெளியீடு : **கருப்புப் பிரதிகள்**
பி55, பப்பு மஸ்தான் தர்கா, லாயிட்ஸ் சாலை,
சென்னை - 600 005. பேச : 94442 72500
மின்னஞ்சல் : karuppupiradhigal@gmail.com

© தர்மினி

அட்டை ஓவியம்: மோனிகா

பின் அட்டை ஒளிப்படம்:ரூபன், ஃபிரான்ஸ்

நூல் : விஜயன், கிரியேட்டிவ் ஸ்டுடியோ

அச்சாக்கம் : ஜோதி எண்டர்பிரைசஸ், சென்னை-600 005.

விலை ரூ. 50/-

**Saavugalal Pirabalamana Oor (Poem)**

**Darmini**

First Published : August 2010

by **Karuppu Piradhigal**
B55, Pappu Masthan Darga, Lloyds Road,
Chennai, Tamil Nadu, India PIN - 600 005
email : karuppupiradhigal@gmail.com Cell : 94442 72500

© Darmini

Cover Art : Monica

Back Cover Photo : Rooban, France

Layout : Vijayan, Creative Studio

Printed by : Jothy Enterprises, Chennai-600 005.

Price : Rs. 50/-

# சாவுகளால் பிரபலமான ஊர்

## தர்மினி

கருப்புப் பிரதிகள்

படிப்பகம்

www.padippakam.com

'வீடுகள் பாதுகாப்பற்ற மரணக்கிடங்குகள்' என படிமங்களைப் கையாள நேர்ந்த தேசத்திலிருந்து அகதிச்சுமையோடு புலம்பெயர்ந்தோடிக் கொண்டிருக்கும் பெண்ணின் பெருமூச்சையும், வழித்தடங்களையும் கவிதைகளாய் நம்முன் வைக்கிறார் தர்மினி. இலங்கைத் தீவினுள் இன்னொரு தீவான அல்லைப்பிட்டியிலிருந்து தப்பியோடி இறுதியாய் தஞ்சம் புகுந்து இதுவரை அகதியாய் ஏற்க மறுத்து வரும் பிரான்ஸ் தேசத்தில் தற்போது, அதற்கான போராட்டத்தையும் செய்து கொண்டு எழுத்தையும், வாசிப்பையும் வாழ்தலுக்கான உந்து விசையாய்த் தொடர்கின்றார் தர்மினி. 'தூமை '(www.thoomai.wordpress.com) 'எதிர்' www.ethir.org ஆகிய இணையதளங்களின் ஆசிரியர்களில் ஒருவராகவும் செயல்படும் தர்மினி, நீண்ட தயக்கத்தின் பின் தம் முதல் கவிதை தொகுப்பை வெளியிடுகிறார். தர்மினிக்கும் அவரது தொகுப்புருவாக்கத்திற்கும் துணை நின்றதோடு தொகுப்பிற்கான முகப்போவியத்தை வழங்கிய ஓவியர் மோனிகாவிற்கும், பின் அட்டை தர்மினியின் ஒளிப்படத்தை நமக்கு எடுத்தளித்த தோழர் ரூபனுக்கும், வழக்கம்போல் நூலின் அகபுற கட்டமைப்பை அழகுற வடிவு செய்த விஜயனுக்கும் பதிப்பு முயற்சிகளுக்கு தொடர்ந்து துணை நின்றுவரும் அமுதா, கவின்மலர், ஷோபா சக்தி, விஜய் ஆனந்த் (பெங்களூரு), பானுபாரதி தமயந்தி (நார்வே) மதிவண்ணன் உள்ளிட்ட நண்பர்களுக்கு நன்றியோ நன்றி.

கருப்புப் பிரதிகள்

நன்றி

ஊடறு • முற்றம் • கீற்று.காம் • உயிர்நிழல் • சத்தியக்கடதாசி தூமை • வல்லினம் • எதிர் • உயிரோசை • எதுவரை • லும்பினி

## அடையாளச் சுவடுகள்

அடிவளவில் மாமரப் பொந்தொன்றைக் காட்டி
மாமா, நீ பிரசுரங்களும் கைத்துப்பாக்கியும்
மறைத்து வைத்த இடமென்பர்.

நீ காணாமற் போன நாளில்
சுருட்டிய கடிதம் கண்டெடுத்த
சீனிப் போத்தலென்று அடையாளஞ் சொல்வர்.

இந்திய இராணுவம் சுற்றிவளைக்கையில்
நீ இறங்கிப் பதுங்கிய கிணறு பற்றியும்
பக்கத்து வீட்டார் கதை சொல்வர்.

அகதியாகப் புகுந்த நாடொன்றிலிருந்து
அனுப்பிய புகைப்படத்தில் அடையாளங்காட்டி
மகிழ்ந்தாள் என் அம்மா.

பிடுங்கிய கச்சான் கன்றுகளின் குவியலிற்
பயந்து ஒழிந்த அக்காவை
இறாஞ்சிப் பறக்கும் பருந்துகளாகக் கொத்திச்சென்றனர்.

விம்மியழுது தேய்ந்த குரலொலி
பின்னொரு அணிவகுப்பில்
இறுகிப் போயிருக்கக் கண்டேன்.

காற்றில் கலந்தாள் காவியமானாளெனக்
கதை செல்லி இழவு வந்தது.

இன்று
சிதறிடும் குண்டுகளினின்று தப்பிக்கச்
செவிடாய்ப் போகாத காதுகளை நொந்தபடி
ஒடிப்பதுங்க
அதிலென்று வீழ்ந்திடும் என்மீது
சிந்திச் சிதறி இரத்தமும் சதையுமாகி
வயலிலும் வரப்பிலும் கரைந்திடுவேன்.
என்றோ ஓர் நாள் நீ வருகையில்
அடையாளமற்ற வெளிகளாயிருப்போம்
மீண்டுமொரு விமானமேறி விரைந்திடுவாய்.

படிப்பகம்

www.padippakam.com

## இருட்டு

கடிகாரம் பழுதடையவில்லை
ஆயினும் முட்கள் நகரவில்லை
நித்திரை நித்திரை.......
தொலைபேசி ஒலிக்காத நித்திரை.

ஆயுதங்கள் அத்தனையும்
பெரும் எரிமலை வாயில் குவிக்கப்பட்டு
சமைக்கப்படுகின்றன.
அவை உருகிக் குழம்பாகி வழிகின்றன.
திடீரென
ஆறாக மாறிப்பாய்ந்தோடுகிறது.

"வரட்சியில்லை"
"வறுமையில்லை"
"பசியில்லை"
இந்தக் கூவல்கள் மட்டுமே கேட்கின்றன.

சித்திரவதைச்சாலைகள்
சிறைக்கூடங்களின் பூட்டுக்கள்
பஞ்சு போலப் பறக்கின்றன.
தவறுமில்லைத் தீர்ப்புமில்லை
தண்டனைதரக் கொம்பு வைத்தவன் எங்குமில்லை.

ஆகா!
பெருஞ் சிரிப்போடு
படுக்கையிலிருந்து உருண்டு விழுந்தேன்
பார்த்துச் சிரித்தது இருட்டு.



## வீடு

ஓர் நத்தையின் கூடு போன்ற
நகர்ந்து செல்லும்
வீடொன்றை
முதுகிற் சுமப்பது எளிதானது.

மண், மரங்கள்,கற்கள்,கம்பிகள்,சீமெந்து கலந்த வீடொன்று
சிதைந்து போவதை
எரிந்து அழிவதை
யுத்தங்களாற் தின்னப்படுபவர்கள்
அனுபவித்துக் கொண்டேயிருக்கிறார்கள்.

அங்கிருந்து ஓடுவதும்
வேடரிடமிருந்து தப்பிக்கும்
மிருகங்களையொத்த வேகத்தோடுதான்.
குண்டுகள்,துப்பாக்கிகள்,வேவுக்கண்கள் சொல்லுகின்றன
'வீடுகள் பாதுகாப்பற்ற மரணக்கிடங்குகள்'.

யுத்தகாலங்களில்
கட்டித்தொங்கும் வாசலோரப்பயணப்பொதிகள்
வறுத்து வைத்த தானியங்களுடன்
இரவுகளைக் காவல்காத்திருந்து
உயிர்கள் தின்னத்தொடங்கும் சத்தங்களில்
வீடுகள் விட்டுக்கலைந்து
ஓடத்தொடங்குவார்கள்.

நத்தையின் கூடு போன்ற
வீடொன்றை நினைந்து வெதும்பியபடியே
ஏதோ ஓரிடத்தை நோக்கி ஓடிக்கொணடிருப்பார்கள்.



படிப்பகம்

www.padippakam.com

## ஆதலால்மறுக்கப்பட்டது

●
ஒரு கடதாசி
எல்லைகள் தாண்டித்தாண்டித் துரத்தி வருவதை
அனுபவித்தீர்களா?

அக்கடதாசி
உங்கள் பெயரும் பிறப்பும் ஊரும்
குலைத்து தனித்து நிறுத்துமென அறிவீர்களா?

எதிர்பாராத நேரத்தில்
பெயரென்ன என்று குழம்பியதுண்டா?

சில விண்ணப்பங்கள் பயமுறுத்துவதை
கடதாசியொன்று
பைத்தியமாக்கிக் கொண்டிருப்பதை
மூளையைத் தள்ளி வைத்துப் பரிசோதித்ததுண்டா?

படிவங்கள்
உங்கள் தலை கழற்றி,
கீழ் மேலாய்ச் சுழற்றி
சைபர் என்று விசுக்கியெறிந்ததை
முண்டமாகக் குப்புறக் கிடந்து
பொறுக்கியதுண்டா?

அடிக்கடி மறக்க வைக்கும் கையெழுத்து
அகதியென்பதை மறுதலிக்கும் நீதிமன்றங்கள்
காசு .

கடதாசிகள் துரத்தித் துரத்திக் கனவை மெலிவிக்க
ஓடும் எல்லைகளிலிருந்து
பாம்பின் படர் தோல் கழற்றி, ஊர்ந்து, அரைந்துஉருமாறுதல்
அறிந்திருப்பீராயின்,
ஒரு கடதாசியும் எண்கள் பொறித்தமுத்திரையும்
துரத்தும் காட்சியொன்றைக் கண்டதாக
எவருடனாவது கதைத்திருப்பீர்கள்.



## சாவுகளாற் பிரபலமான ஊர்

●

தீவிலுள்ள தீவுகளிலொன்றின் வாசற்துண்டாக
அக்கிராமம் இருக்கின்றது.
பாம்புக்கடிப் பரியாரியும்
பதிவு செய்யும் விதானையும்
வயோதிபர்களுமாக
வாழ்ந்து கொண்டிருக்கின்ற போரைப் பதிந்த முகமாய் அவ்வூர்.

மண்கும்பிகள், மதகுகள் தனித்திருக்க
விளையாட்டுகள், வேலியடைத்தல்,
விடிகாலைப் பனங்காய் தேடல்
எதுவுமற்று
ஈச்சைகள், கிளுவைகளுள்
காவலுக்கு அரண்கள் மற்றும் கடற்படை.

சுடுகாட்டுத் தாழைகளிலிருந்து
நாகங்கள் தப்பித்தோடியிருக்க
கல்லறைப் பூவரசுகளின் நிழலில்
அடையாள அட்டைகளைக் கைகளிற் பொத்தியபடி
பிணந்தூக்க எவருமற்று(க்)
கிழவிகளும் கிழவர்களும் கால் நீட்டிக்காத்திருப்பர்.

'எலும்புகள் எடுத்தல்'
'குண்டுகள் வெடித்த கடைகள் '
'இடித்த பள்ளிக்கூடம்'
'வெடி வைத்த கோயில்'
'உயிரோடு எரித்தல்'
'கிணறுகளிற் கிழிந்த உடைப்பெண்கள்'
இப்படிப் பத்திரிகைத் தலைப்புகளாற்
பிரபலமானது இவ்வூர்.

சிதைவடைந்த ஊரிற் செழித்துக் கிடப்பவையே
சுடுகாடும் இடுகாடும்.



படிப்பகம்

www.padippakam.com

## ஆற்றுக் கழிமுகத்துக் கல்

அவனது
உரையாடல் எனும் வழித்தடத்தில்
தொலைந்து போன
என் பரவச நாட்களை
மறைத்து வைத்திருந்த
மர்ம மாளிகையொன்றினுள் கண்டுபிடித்தேன்.

ஆற்றுக் கழிமுகத்தில் கல்லொன்று எடுத்தேன்
தேய்ந்து சென்ற நாட்களின் தீப்பொறியில்
அது
ஒரு வைரக்கல்லாக
ஒளி வீசி வசீகரித்து
தன் ஒளிச்சிதறல்களை எப்பக்கமும் வாரியிறைத்தது.

அதொரு பெரு நெருப்பாய்க் கனல ஆரம்பித்த கணத்தில்...
தொலைந்து போன
என் பரவசகால நாட்களுக்கான
வழித்தடத்தைக் கண்டுபிடித்தேன்.

அக்கணத்திலிருந்து
சிறுமைகள் சிதறிப்போய்
காற்றிற் மிதப்பதாயும்
கண்களில் மின்னல் பிறப்பதாயும்
கனவுக்குப் பல மொழிபெயர்ப்புகளுமாக
வரையறையற்ற சுதந்திரத்தோடு
என் நாட்களை வளைத்திடுகிறேன்.



## சிறுபறவை

எப்போதும்
வெறுங் காற்றில்
இறகு விரித்துப் பறந்து திரிந்து
சிறகுகள் உதிர்ந்து
அலைக்கழிந்த பறவையாய்
தாகத்துடன் தரையிறங்குகையில்
பருகத் தேடும்
நீராய்ப் பாசம்.

நில்லாமல் வட்டமடிக்கும்
என் நிழலறியாமல்
செட்டைகள் கழரும் சாக்களைப்பில்
நிலம் பாவி நான் நடக்கையில் நீ நினைப்பாய்
இடையிடையே இறகு விரிப்பதாய்.

தானாகத் தேய்ந்து கொண்டேயிருக்கிறது
நேரம்
விநாடிகள் ஒவ்வொன்றும்
பூமியைத் துரத்திச் செல்ல
கணிப்பீடுகளிற் கட்டுண்டிருப்போம்.



படிப்பகம்

www.padippakam.com

## நிர்வாணங்கள்

●

வெறும் வீதியில்
காவலரண் தாண்டுதல்
தயங்கி நடுங்கிச் சாதல் கொடுமை - அது
நள்ளிரவுச் சுடுகாடு இனிமையென்று உணரும்.

இடுப்பிலொரு கத்தி கொண்டலைந்து
எதிர்பாராச் செருகலாய்
அவர்கள் கண்கள் வெறித்தபடி நித்தம் தொடர்ந்து
வெற்றுத் தெருவில் ஒரு நாள்
அந்த இராணுவத்தான்
பல நாட்குறிக்கு கத்தி வீசினான்.

முக்கிய விசாரணை
சாக்கு மறைப்புத் தூக்கித் தள்ளினான் என்னை.

இடுப்பிலென்ன?
இழுத்தெறிந்து கிழித்தெறிந்து
ஒழித்து வைத்த ஆயுதம் உண்டோவென்றான்.
செத்துப் போன கன்றைச்)
சுற்றி நின்று ஓநாய்கள் பிய்ப்பதாய்
சிப்பாய்கள் ஓலமிட்டுச் சிரித்தன.

அவர்களின் நிர்வாணம்'
ஆணவங் கொண்ட வீரமாம்
எனது நிர்வாணம்
பெரும் அவமானமாம்
பல்லுக்கழரச் சிரிப்பு
நாகங்களாகப் படப்பிடிப்பு
டேய்....
சொறி பிடித்த தொடைகள்
மலமாய் நாறும் வாய்கள்
அழுக்காக மடிந்த வயிறுகள்
நெளிந்த குறிகள்
உங்கள் நிர்வாணங்களை ஒரு தடவை பார்த்து
வெட்கி
மற்றுமொருத்திக்குக் காட்டாது
பொத்தி வையுங்கள்.





படிப்பகம்

www.padippakam.com

## நடந்து சென்ற நாளெது?

●

வானலைகளை அகோர உறுமல்கள் நிறைக்க
மொத்தமாகப் பல உயிர்களைக் குதறிடக் குறிவைத்து
அது, ஆடியசைந்து காற்றுக் கிழித்து
காதடைக்கச் சிதறும்.

அண்ணாரப் பார்த்து அவரவர்
தலை நோக்கி விழக் கதறியோடிச் சிதறி
இலக்கற்ற கணைகள் சீறி வெடிக்க
கால்கள், கைகள், கழுத்துகள்
தனியாய்க் கிடக்கக் குளறிக் கதறும் குரல்கள்..

பாதம் பிய்க்கப்பட்ட காலொன்று
இறைச்சியாய்த் தொங்க
தொடையின் சிதைந்த தசைகளுடன் துடிக்கிறான் சிறுவன்.
வலியிற் கதறும் குரல் நிற்கா.
வெற்றுப் பிட்டங்கள் காட்டிக் கேட்பானே என்னை
இனம்,மானம்,வீரம்,ஈழம் வேண்டுமா உனக்கு?

அவனிரு கால்களும் கடைசியாய்
ஓடிய நாட்களை மறந்திட மாட்டான்.
தன்னிரு கால்களில் கடைசியாய்
நடந்தது எப்போதென
மறந்து போயிருப்பான்.



## தொனி

●

சுற்றியிருக்கின்ற நான்கு வீடுகளும்
சற்றுக் கதவு திறந்து பார்த்தன.

வீதியில் போனவர்களும்
வேடிக்கை பார்த்துச் சென்றனர்.

கணவன் என்னைத் திட்டிக்கொண்டிருக்கிறான்
காதடைக்க வாயடைத்து நின்றேன்.

ஆற்றாமையுடன் நான் சொல்லும் சமாதானங்கள்
அவன் காதுகளிலிருந்து நழுவி காலடிகளில் மிதிபட
என் வீட்டில் ஆதரிக்க ஆளில்லாத அகதியானேன்.

மறுநாள் மெதுவாக வந்தானவன்
என்னிரு கைகள் பிடித்து
ஒற்றைக் காதில் மட்டுமே ஒலிக்க,
இன்று உரத்துக் கத்திட முடியாதவன் போல்,
மெல்லச் சொன்னான்
மன்னித்து விடு'
என் ஒரு காதுச்சவ்வும் அதிராத அவ்வசனம்
எட்டிப் பார்த்த அத்தனை வீடுகளுக்கும் எப்படிக் கேட்கும்?



படிப்பகம்

www.padippakam.com

## கொல்லும் வரலாறு

எம் கிழிசல்களைக் களைய வேண்டும்.
பசிக்கும் வயிறுகள்
நிறைவதைக் கனவிலும் பார்ப்பதில்லை.
இரவிற் தட்டப்படும் கதவுகளுக்காகவும்
பகலிற் துரத்தும் கண்களுக்காகவும்
நாங்கள் விழித்திருக்கின்றோம்.

இப்போது
நாங்கள் கேட்பதெல்லாம்
இற்றுப் போகாத ஆடை
பசி தீர்க்கும் உணவு
வாழ்வதற்கு உயிர்
மற்றும்
கலையாத நித்திரையுமாகக் குறுகிப் போயின.

உங்கள் வீட்டுக் கணப்புகளின் கதகதப்பில்
சூடேற்றச் சில கதைகள்.

தாகந் தீர
எம் இரத்தங்கள்.

உங்கள் தினவெடுத்த தோள்களால்
முறுக்கேறிய கைகளால்
உடைபடுவன,
எங்கள் குடிசைக் கதவுகள்.

உங்களின் அடைந்தே தீருவதென்ற ஆவேச அலறல்களுக்கு
ஈடாகக் கேட்பதோ
எங்கள் அழுகைகளைத்தான்.



இன்னும்,
இரத்தமும் கண்ணீருமின்றி
வீரமும் சாவுமின்றி
எப்படிப் பெறுவாய் சுதந்திரமென்று கேள்விகள் கேட்பீர்.
ஊற்றிக் கழுவிப் புதைத்தவையெல்லாம்போயின.

எங்கள் முற்றங்களை எட்டி நின்று பார்த்து
எரிகிறது தீ...
கொல்லுங்கள்...கொழுத்துங்களெனக் கூக்குரலிடுவீர்கள்.
முடி தரித்த வரலாறு
வாளெடுத்த வீரம்
முச்சங்கக் கதைகளும் சொல்லிக் கதறுவீர்கள்.
தமிழ்ச் சாதி காக்க
எங்களைச் சாவேந்தி வீழச் சொல்வீர்.

கட்டளையிடும் ஆசனமொன்றில் வீற்றிருந்து
ஊரோடு போராடென்பீர்.
ஒரு உண்ணாநோன்பில்
அவ்வப்போது ஊர்வலத்தில்
ஆறுதல் கூட்டங்களில்
தொடை தட்டி உறுமி
உலகத் தமிழுக்கு உயிர் கொடுக்க
எங்களைப் பொறி வைப்பீர்.



படிப்பகம்

www.padippakam.com

## விலங்குகள்

படியேறி வந்தவன்
"அவரைச் சுட்டுவிட்டோம்" என்றான்.

அவன் கைகளில் துப்பாக்கியும் அதிகாரமும்.

நானும் குழந்தைகளும் வாய்திறக்கவில்லை.
இன்னுமொரு துப்பாக்கிக்காரன்
உதடுகள் மடித்துச் சிரித்தான்
சொன்னது பொய் எனப்பட்டது.
மிரட்டலுடன் விசாரணைகள்
வந்த வாகனம் படபடத்துப் போனது.

ஆறு மாதங்கள் ஆனதும் தோல் போர்த்த எலும்பாக வந்தார்.
பாஸ் இல்லாமல் காட்டுப் பாதையால் கடந்த அடையாளமாக
விலங்கின் தழும்பு காலில் கறுத்துக் கிடந்தது.



## மறுதலித்தல் பற்றிய இரு கவிதைகள்

எங்கே ஓடிப் போன
ஒரு கூட்டம் முகில்களை
இங்கு வாவென இழுத்து வந்து
சங்கிலி போட்டுக் கட்டி வைத்து(ச்)
சாரல் தூவெனச் சென்னேன்.
தூவெனத் துப்பிவிட்டு அவை
உலர்ந்த முகில்களாக
நகர்ந்து போயின.

விலகுதல் விலக்குதல்
அலட்சியப்படுத்தல்
ஆர்வமற்றிருத்தல்
பொறுப்பற்றிருத்தல்
புன்னகைத்தபடியே தட்டிக்கழித்தல்
புதிதாக எதுவுமில்லையென்பதாக
மௌனமாதல்
நீ எனக்குப் பொருட்டல்லவென்பதை
மறுதலிப்புகள் மறைமுகமாக உணர்த்தும்.



படிப்பகம்

www.padippakam.com

## பாம்புகளைத் தின்பவள்

●

என் பதின்மூன்று வயதிலிருந்து
அடர்ந்த வனத்தில்
நடந்து திரிந்து
அங்கு பலவிதப் பாம்புகளைத் தேடியலைகின்றேன்.

சிறியது பெரியது
சுருண்டிருப்பது கயிறு போல் மெலிது
பச்சை மஞ்சள் கறுப்பு
கோடு போட்டது புள்ளிகளிட்டது
பல்வேறு வடிவங்களில்
சருகில் ஊர்ந்து செடிகளில் படர்ந்து
கொப்புகளில் சுருண்டு
இலைகளில் மறைந்து
பட்டைகளில் ஒட்டியும்
புற்றுகளில் பதுங்கியும் வாழுமவை.

சீறும் பாயும்
என் கால்களைச் சுற்றிக் கொள்ளும்
தடி கொண்டு தேடி
கழுத்தில் சுருக்கிட்டு
வால்பிடித்து கழட்டி உலுப்பி
சற்றும் தாமதியாமல்
வாயிலிட்டு மென்று விழுங்குவேன்.

எப்பாம்பும் என் கையையோ காலையோ கொத்தியதில்லை
ஆயினும் வாழ்நாளில் மலைப்பாம்பு ஒன்றைத்தானும்
நான் கொன்றதில்லை தின்றதில்லை.



பாம்புகளின் வலிமை பற்றிய அலட்சியத்தில்
பெருமிதப்புடன் வெப்பக்காடுகளில் அலைந்தேன்.

என் பாம்புப் பசி தீரவேயில்லை.
மழை பொழிந்த நாளொன்றில்
வீழ்ந்து கிடந்த மரக்கிளையில் பின்னிக்கொண்டு
கறுப்பும் மஞ்சளும் வெளுப்புமாக மினமினுத்தது மலைப்பாம்பு
இருகைகள் கால்களின் வலிமை
உடனிருக்கும் ஆயுதங்கள் கொண்டும்
அதை வென்றிட முடியவில்லை.
அப்படியே விழுங்க
அகல வாயைக் திறந்தேன்
பாம்பின் வாயினுள்
என் இடுப்புவரை போயிருந்தது.

கடைசியில்
ஒரு மலைப்பாம்பு என்னை விழுங்கியே விட்டது.



படிப்பகம்

www.padippakam.com

## தோட்பட்டைகளிற் செட்டைகள் ஒட்டின

●

புலரும் பொழுது புதிதாகத் தெரியும்
மறந்து போன பாடல்கள்
மீண்டும் முணுமுணுக்கப்படும்.
கலிங்கு மீறிய குளமாக
உற்சாகம் உடைப்பெடுத்தோட
கசங்கிய ஆடைகளும்
கச்சிதமாக உடலிற் பொருந்த
என் /இவள்/அவள் கண்களில் மின்னல் தெறித்தோடும்.

தோட்பட்டைகளிற் செட்டைகள் இரண்டு ஒட்டியன போல
என்/இவள்/அவள்
கால்கள் இல்லைத் தரையில்.

எட்டிப் பிடித்த முதுமைதனை(த்)
தட்டி விசுக்கித் தரைவிட்டெழும்பி(த்)
தீர்நதுவிட்ட துணையின் காதலும்
புத்துயிர்ப்போடு பொங்க
மேலுமொரு காதல்
என்னை/இவளை/அவளை(ப்)
பட்டாம்பூச்சியாய்ப் பறந்திடச் செய்திடுமே.



## யுத்தமும் தர்மமும்'

●

இன்னுமொரு பெண்
வெறிகொண்ட குண்டாக வீசியெறியப்பட்டாள்.

ஐந்து மாதக் கருவும் போருக்குத் தேவையாம்
இனி எம் கர்ப்பங்கள் கண்காணிக்கப்படும்
உப்பிய வயிறுகளும் உரியப்படும்
தாய்மையை ஆயுதமாக்கிய வீரமாம்!

சில மாதங்களான குழந்தைகளை நோக்கியும்
சில வருடங்களான சிறுவர்களைக் குறிவைத்தும்
தாயின் கதறலை வென்ற
துப்பாக்கிகளின் ஓசைகள்
வீரர்கள் போர் செய்கின்றனர்
செய்து கொண்டேயிருக்கின்றனர்
எங்கள் பெண்களும் குழந்தைகளும்
அப்பாவி இளைஞரும் துப்பாக்கிகள் மீதும்
அதிகாரங்கள் மீதும்
வெறிகொண்டவர்களால் மட்டுமே
சூழப்பட்டுள்ளனர்.

கிழக்கிலும் மேற்கிலும்
வடக்கிலும் தெற்கிலும்
தீவின் திசையெங்கும்
வெறிகொண்டவர் அலைகின்றனர்.



படிப்பகம்

www.padippakam.com

## நிகழ் தகவு

●

உங்கள் அவமானச் சீருடை
அதிகாரஞ் சத்தமிடும் ஆயுதங்கள்
கேட்க எவருமற்ற எக்காளம்
வடிந்தொழுகும் வக்கிரங்கள்
அவர்களின் கிழிந்த கால்களிடையே
தடியிலொரு துணியாகத் தொங்கிக் கிடக்க
சிறீலங்காத் தாயே எனச்சங்கதம் செய்து
அதிகாரங் கொக்கரித்துச் சமத்துவத்தைப் பரப்பிகொண்டிருக்கும்
அத்தருணங்களில்

எவனொருவனதும்,

உடலின் உயிரின் நலன்களைப் பிரார்த்தித்து
அக்கா கடிதம் எழுதிக் கொண்டிருக்கலாம்.

காதலி பிரிவுத் துயருடன் துளிர்த்த கண்ணீரைத் துடைத்துக்
கொண்டிருக்கலாம்.

பக்கத்து வீட்டுப் பெண்ணொருத்தி
விடுமுறை வரவை எதிர்நோக்கி பாதியில் விட்ட காதலைச் சொல்ல
வீட்டு வாயிலை எட்டிப்பார்க்கலாம்.

செல்ல மகள்
பொம்மையும் புதுஉடுப்பும் நிறைந்த
கைகளைக் கனவிற் கண்டு சிரிக்கலாம்.

மனைவி
நித்திரையற்ற அவளிரவுகளுடன்
உனை நினைத்துப் போடலாம்.



கடன்தீர்க்க மிச்சமிருப்பதை
எண்ணிக் கொண்டிருக்கும் கிழத் தாயின் கண்கள்
சாவுக்காவது வருவாயாவெனக் கலங்கலாம்.

நீங்கள்...
அப்பெண்ணின் இரு கால்களைப் பிடித்திழுத்து
கிடங்கிற் தள்ளி
மண் மூடி
கழற்றியெறிந்த
சப்பாத்துகளையும்
இராணுவச் சீருடையையும்
பொறுக்கி அணிந்து கொள்கின்றீர்கள்.



படிப்பகம்

www.padippakam.com

## விலாசம்

●

நண்பா!
பல நாளாய்ப் பார்த்திருந்தேன்
உன் கடிதம் வரவில்லை.

என் முகவரி தெரியாதல்லவா?
முகவரி தருகிறேன் முதலில் நீ பதிலெழுது.

சிவப்புச் சேலை சுற்றிக் கட்டிய சிறு சதுரம்
அகன்ற ஆலமரம்
அருகில் இரு பாலை மரங்கள்
அக்கராயன்
கிளிநொச்சி.

மீண்டும்
என் நிரந்தரமற்ற முகவரி
கவனமாகக் குறித்துக் கெள்.

சிவப்புச் சேலை
சிறுசதுரம்
அகன்ற ஆலமரம்
அருகில் இரு பாலை மரங்கள்
அக்கராயன்
கிளிநொச்சி.



## வெற்றுச்சதுரம்

●

எண்ணக்கோடுகளினை வண்ணக்கலவை ஊடுற
மொடமொடத்த துணிகள் தூரிகைகளெடுத்து
ஆணியறைந்த சட்டகத்துக்குள்
உலகின் அதிசிறந்த ஓவியம் பதிய நினைத்தேன்.

பெயரற்ற ஒன்றின் பிறப்பை(த்)
துள்ளித்துள்ளி
கை கால் உடல் தூவி
உருவாக்கலில் துடித்தேன்.

வெறிகொண்டவளாக
விரிந்த கைகளில் அள்ளி
வரைந்து முடிக்கிறேன்.

விரல்களிலும் நகங்களிலும்
விலகாத வர்ணங்களை உரசிக்கழுவி
ஆற்றாமையுடன்
களைத்த முகத்தைக் கண்ணாடியிற் பார்த்தேன்.
அத்தனை வர்ணங்களும்
என் முகத்தில் அப்பியிருந்தன.

முகம் உருவிய வண்ணங்களால்
உலர்ந்திருந்தது
ஆணியறைந்த சட்டகச்சதுரம்.



படிப்பகம்

www.padippakam.com

## பறக்கும் கூடாரங்கள்

•

அவை பாறைகளிற் துளைகளிட்டு
இரும்புக் கயிறுகளாற் கட்டி வைக்கப்பட்டுள்ளன.
அவற்றினுள் கண்ணீரோட இறுக மூட
நித்திரையைத் தேடலாம
மற்றும் சில நிலைகுத்த
வெறித்துக் கிடக்கலாம்.

பெருங் குண்டோசைகள்.
காதினுட் சுழல
வெறும்வயிறுகள் அனலாயெரிய
கைகள்,கால்கள்,மூளைகள் பரவி
வயல்கள், வீதிகள், வீடுகள் எங்கும்
செத்துஞ் சாகாமலும் உயிர்கள்
பிணங்கள் தொங்கும் மரங்கள்.
இன்னும் சில கண்களில் கனவுகளும
மிச்சமாய்த் துன்புறுத்த
அக்கூடார நிலங்களில் நித்திரைகள்.

காவலைக் கட்டுகளை வாயில்களை
முட்கம்பிகளைத் தாண்டிச் செல்ல(ப்)
பறக்கும் கூடாரங்களைக் கண்டுபிடிப்பீர்.



## கனவுகளுடன் கடப்பவள் அல்லது அலைபவள்

•

தொங்கு பாலமென்று
தூரத்தில் தெரிகிறது அதிலே
நடந்து கொண்டே
நான் கண்ட கனவுகளிவை.

தாகத்திற் தவித்த வரிக்குதிரை நீரருந்தப் போக
காத்திருந்த முதலையொன்று
கழுத்தைக் கவ்விப்பிடித்தது.

பசும்புல் மேய்ச்சல் தேடியலைந்த புள்ளிமானை(ப்)
பாய்ந்து வந்த சிறுத்தை பசியாறியது.

பனிபெய்யும் இரவைப் பார்த்திருந்த புல்லிதழ்களை
எருதின் குழம்புகள் கிளறிக் குதறின.

படபடத்த இறகைப் பிய்த்தெறிந்து கூடடைக்க
சிறகடித்துத் தவிக்கும் சிறு குருவி.

வண்ணங்களால் அலங்கரித்த வானமாக(ச்)
சில நொடிகள் கண்சிமிட்டி(ச்)
சிதறிப் பெருமுகிலிற் கரைந்திட்ட எண்ணங்களானேன்.

நடந்து கொண்டே கண்ட கனவுகளுடன்
பாலத்தின் கீழுள்ள ஆழத்தைக் கடந்து போனேன்.



படிப்பகம்

www.padippakam.com

## மிதக்குது மனது

சுழன்றடிக்கும் காற்றில்
மிதந்து செல்லும் சருகு போல
காதல் எனக்குள்ளே
மிதந்து கொண்டேயிருக்கிறது.
திருமணம்
குழந்தைப்பேறு
வயோதிபம்
எதுவுமே மிதக்கும் என் காதலை
அமிழ்த்தி விடவில்லை.
அது
தீர்ந்து போகாமல் மிதக்கின்ற வேளைகளிலெல்லாம்
திருமணமும் வரைமுறையும்
உடற்தளர்வும்
மனச்சுமையும்
என்னைக் கடந்து விடுகின்றன.



## என்னையும் வளர்த்தனர்

யாழ்ப்பாணத்தில்
பொமரேனியன் குரைக்கும் போது
எங்கள் பணக்காரத்தனஞ் சத்தமிட்டுச் சொல்லப்படும்.

எலும்பும் சதையுமாகச் சாப்பாடு
சீமெந்தும் கம்பியுமாக
வீடு போல கூடு
சடைசடையாகத் தொங்கும் ஷம்போவின் பளபளப்பு.

பக்கத்து வீட்டு நாயின் குரல் கேட்டு
மதில் பிராண்டும்
வீதிப் புழுதியில் விளையாடும் ஒல்லி நாயிடம் போக(த்)
தாவித்தாவிக் கம்பிக் கதவிற் குதிக்கும்.
அப்போதெல்லாம்
பக்கத்து நகருக்கு(க்)
கழுத்திற் சங்கிலி கட்டிக் கூட்டிப்போவோம்.
அது இன்னொரு பொமரேனியன் வீடு.
சில நாட்களில் கொண்டு வரப்படும்
பின் பொமரேனியன் குட்டிகளாகப் போடும்.

இப்போது நாம்
ஐரோப்பிய நகரமொன்றில்
நாய் வளர்ப்புக்கு இடமில்லை வீட்டில்.
வயசு வந்த பெண்பிள்ளை என்னை
வீட்டில் வைத்திருக்கப் பயமாம்.
பக்கத்து நாட்டிலுள்ள
மச்சானுக்குக் கல்யாணங் கட்டி வைக்க(க்)
கலப்பில்லாத என்னினத்துக் குழந்தைகளை(ப்)
பெற்றெடுக்கின்றேன்.



படிப்பகம்

www.padippakam.com

## தாகமாயிருக்கிறது

●

உரையாடலின் வெற்றிடம்
தண்ணீருக்கான விடாயாய்
தாகத்தின் வெம்மையாய்
வறள வைத்தது.

கள்ளிகளைக் கடித்த ஒட்டகங்கள்
முட்கள் குத்திய புண்களை
நக்கிச் சுவைக்கின்றன.

மண்ணிற் கீறிய ஓவியம்
புயலிற் கிழிந்தே போனது.

துடைத்து விட்ட பாலையில்
இரட்டைப் பாதங்கள்
அடிகள் அழிபடப் போயின.

வார்த்தைகளுக்கான தவிப்பில்
தீர்க்க முடியாமல்
என் தகிப்பு.

இரண்டு ஒட்டகங்களைத் தின்று
தாகந் தணிக்க முயன்று
கால்கள் மட்டும் வளர்ந்த போதில் அலைய.....

பாலைவனத்தில் விக்கிச் சாகும் ஒருத்தி
என் கன்னங்களில்
அறைந்தாள்.



## குருதியிலெழுதும் கற்பிதங்கள்

●

பின் கட்டப்பட்ட கைகள்
மறைத்துக் கட்டிய கண்கள்
மௌனமாக்கப்பட்ட நாவுகள்
மண்டை பிழக்க வேட்டுகள்

மடிந்து விழுந்த கால்கள்
துப்பாக்கி பிடித்த கைகளில்
மனிதம்
நிச்சயமாய் இறந்து போயிற்று.
ஆஷ்விச், வெலிக்கடை, வந்தாறுமூலை,
அபுகிரைப், குவான்டனாமே,
குஜராத் இன்னும்...

பல சிறைகளில் வெளிகளில் சித்திரவதை முகாம்களில்
வீடுகளில்
செத்து விழுந்து கொண்டே
மனிதங்கள்.

மதங்களைக் காக்க
மனிதரைக் கெல்லும்
மடையர்களுக்குத் தூ.....தூ....தூ...
குருதி வழிந்து ஊற்ற(க்),
குடித்துச் செழிக்கும்
மொழி அழிக... அழிக... அழிக...
பல மனிதர் தின்று
ஓரினம் வாழ்தல் ஐயோ கேடு !



படிப்பகம்

www.padippakam.com

## இரக்கவாளர்களின் உடைகள்

அகதிகளுக்குக் குடிசைகள் கட்டினர்.
அழுக்கேறிய ஒற்றை ஆடைக்குப் பதிலாக
இரக்கவாளர்களின்
உடைகளைத் துவைத்து
அணிவித்தனர்.

அரிசி, பருப்பு, சீனி மற்றும் மாவும்
மூடைகளாக முதுகுகளில் ஏற்றி(த்)
தணலாய் கிடக்கும்
வயிறுகளைக் கஞ்சியால் கழுவ
நிவாரணந் தந்தனர்.

மேலுஞ் சில
ரூபாய்களைப் பொத்திக் கொடுத்துப்
புகைப்படங்களும் பிடித்தனர்.

உழுத நிலத்தைக் கறவை மாடுகளை
குளத்து மீன்களை
குடியிருந்த துண்டு நிலத்தைக்
குண்டுகள் கொட்டிக் குலைத்து
தின்ற சோற்றைத் தட்டிக் கொட்டி
வரிசையாக நிறுத்தி
வள்ளல்களாய்
நிவாரணங்கள்
வழங்குதலில்
தீர்ந்தது தீர்வு.

மனிதர்களை
விலங்குகளை
முக்கால் உயிருடன்
மணலள்ளி மூடி
தப்பியோடுகையில்
முதுகிற் சுடுபட்டு
தண்ணீரிற் செத்துக்
குவிந்த சாம்பலில் கொட்டுகின்றனர்
தங்கள் இரக்கங்களை.

பிணக்காட்டிற் செத்துக்கிடந்த
பிள்ளைகளை
பெற்றவரை
துணையை
அயலவரை
நீள் வரிசைகளில்
நின்று கேட்கின்றனர்.
எந்த நிவாரணத்தில்
வழங்குவீர்?





படிப்பகம்

www.padippakam.com

## அலட்சியம்

உனது வீரியமிக்க வாற்பேத்தைகளிலொன்று
அவள் வயிற்றில் நீந்திடுமென நடுங்குவாய்.

வார்த்தைகளின் மேன்மைகள் கயிறாய்ப் பிணைத்திருக்க
நாக்கு நீட்டிக் கொத்துமோவென அஞ்சுவாய்.

நட்பு வட்டத்தின் விளிம்பில் நிறுத்தி
உள்ளே வெளியே குதிக்கச் செய்வாய்.

தாளந் தப்பிடும் வேளைகளிலெல்லாம்
நெருப்பு வளையமாக வீசியெறிந்து
சுட்டு விட்டு
வேடிக்கையென்று கைதட்டிச் சிரிப்பாய்.

அலட்சியப்படுத்துவதால்
கவனங்கொள்!
நீயல்ல,
இப்போது அவள்
அலட்சியப்படுத்துவதால்
சூடியுள்ள முடியில்
மேலுமதிகமாக ஒரு கல் மின்னுவதை உணர்கின்றாள்.



## அகமும் புறமும்

மதுவை எண்ணலற்றுக் குடித்தேன்
இன்று
அதிகமாய் நேசிக்கத் தேடியது
நினைக்க வைத்தது
நம் உரையாடலின் நேரம்
நீள விரும்பி
நெருக்கமாய் அணைக்கத் தோன்ற
மனிதர் மீதான காதல்
மதுவினால் ஊறும்.

போதை எனை வாதைகள் செய்யும்
உடலும் மனசும்
அதைத்துப்பிடச் சொல்ல
மருகும்
கண்கள் சுழல
தழும்பும் விழிநீரை விழுங்கி
தீர்த்திடும் போதை தந்த வாதைகளை.

எம் நிலமெங்கும் பிணங்கள் கிடக்குது
நானுணர்வேன்.
நிணமும் பிணமும் உண்ணும் பேய்கள் உலாவலும்
நானறிவேன்.
ஆயினும் நானின்று உயிரோடுள்ளேன்.

நீரால் நிலத்தால் பிரிந்த துயரில்
வேலை முடித்து
வெந்நீரிற் குளித்து



படிப்பகம்

www.padippakam.com

நேரம் ஒதுக்கிப் பேச
மதுவை ஊற்றி
மேசை நிறைத்து
மசாலாவுடன் மாமிசங்கள் மற்றும் மலர்க்கொத்துகளுடன்
அவ்வப்போது வாதங்களைக் குரோதங்களை வீசி
முடிவிற் சில பாடல்களாற் தீர்ந்திடும்.

எம் நிலமெங்கும் பிணங்கள் கிடக்குது
நானுணர்வேன
நிணமும் பிணமும் உண்ணும் பேய்கள் உலாவலும்
நானறிவேன்.
ஆயினும் நானின்று உயிரோடுள்ளேன்.



## கிறுக்கி

வரைந்தளித்த ஓவியத்தைப் படுக்கையறையிற்
பொருத்தியிருந்தாய்
தூங்கத்தொடங்கும் நேரம் - அதில்
குறுக்குமறுக்காகக் கோடுகள் நெளியுதென்றாய்.
வியர்வையிற் திடுக்கிட்டால்
வெளிச்சங்கள் மின்னுதென்றாய்.
விடியற்காலையில்
கோணலாகத் தொங்குதென்றாய்.

இன்னுமதிகமாய்
நேரத்தையும் தூக்கத்தையும் குறுக்கீடு செய்யும்
கிறுக்கலென்றாய்
உனது முறைப்பாடுகளை ஏற்றுக்கெண்டு
அதைக் கிழித்துவிடு என்றேன்.

எனது ஓவியத்தை(க் )
கிழிக்கவே அழிக்கவே முடியாதென
நேசமும் திமிருமாக நீ சொன்ன வேகத்தில்.......

உனதுயிரின் ஒரு துளி
சிதறித்தெறித்து
என் மீது சிந்தியது.

சிலிர்த்தவுடலுடன்
துடைத்துவிட மனசின்றி
வெற்றுத்தரையில் வீழ்ந்து கிடந்து
நிறுத்த மறுத்த என்னுதடுகளின் புன்னகையால்
நெஞ்சினறைகளை நிறைத்து நனைத்துக் கொண்டேன்.



படிப்பகம்

www.padippakam.com

## முத்தக்காடு

●

அவனிடம்
ஒரேயொரு முத்தந் தரக் கேட்டபோது அது
அவளைச் சிலிர்க்க வைக்கும் வசனமாயிருந்தது.

தவித்துப் புரளும் அலைகளை
உதடுகள் உணர வைத்தது.

விரிந்து சென்ற கனவுகள் ஊடாக
கவிதைகளை எழுதித்தந்தது.

'ஒரேயொரு முத்தமென்ற' வாக்கியத்தை
உலக அன்புப் பிரதி என்று மொழிந்தாள்.

காத்துக்களைத்து
மெதுமெதுவாக எழுத்துக்களாக
உதிர்ந்தது வசனம்.

முடிவிலது
வெறுமையை ஒரு நாள் விட்டுச் செல்கையிலே
அதுவொரு
குறுங்கவிதையாகவோ
சிறுகனவாகவோ போகட்டுமே என்றான்.

அவளுடலே முத்தக் காடாய்க் கிடந்தது.



## பட்டஞ்சூட்டல்

●

அகழி போல் வீடு
சுற்றி உள்வேலி, வெளி வேலி
அப்பா, அண்ணன், தம்பி, அயற்சிறுவன்
தெருவில் நடந்தால் உதவிக்குத் வருவர்.
பவனி வருகையில்
பரிவாரங்கள் தொடர்தலாக நெருடும்.
கன்னி மாடத்தைப் போல
நம் வீடு கட்டப்பட்டதென்பர்.
மேலுமொரு காவலன் அதிகரிக்க
பலத்த பாதுகாப்பு.
அவனைக் கலவி செய்யவும் உத்தரவு.
கணவனாயவன் சொல்லப்பட்டான்.
சம்மதமில்லையெனில்
கோட்டைக்கு நீ இளவரசி இல்லையென
அறிவித்தலிட்டனர்.
கோட்டையும் கொத்தளமும் சூழ
அவர்கள் கொடி பறக்க
அவளிருந்தாள்.

பின்னொரு நாளில்
காதலின் வெக்கையில்
காமத்தின் தகிப்பில்
கட்டிய கோட்டை தணலாயிற்று.
வீதிகளில் அவளுமொரு வேசியாய்
பாடகியாய்
பிச்சைக்காரியாய் அவளிருந்தாள்.

இப்போது இளவரசி இல்லை
இராணியாக அவளிருந்தாள்



படிப்பகம்

www.padippakam.com

## தீர்வை நாளொன்றில்

ஆயுதங்களை எம்மீது தீர்ப்போரா!
அந்நாட்களில்
எங்களது தொண்டைகளினின்று வெடித்துக் கிளம்பும்.

இன்று வரண்டு போயின
தாகத்தின் வெம்மை
குடல் பிடுங்கும் வயிறுகள்
தகித்துத் தெறிக்கும் கணைகள்
குறி விழுத்தும் சன்னங்கள்
கதறித் தொண்டைகள் களைத்துப் போயின.

நாம் காயமுற்றவர்களை(க்)
கையிற் சுமந்த மனிதர்கள்.

அந்நாளொன்றில்
எம் தொண்டைகளிலிருந்து வெடித்துக் கிளம்புபவை
உங்களை எரிக்கும்.



## வேடங்கலைதல்

வீட்டு முற்றத்தில் வந்து நின்று
குடிக்கத் தண்ணீர் கேட்பவரை(க்)
குடம் வெறுமையெனப் பாவனை செய்து
கிணற்றில் அள்ளிக் குடிக்கலாமென்பர்.

துலாவிழுத்து நீரூற்றி
பனையேறிய களைப்பு
கையேந்திக் குடிக்க விடாய் தீருமென்பர்.

மாதா கோயிலில் இடவலம் பிரித்து
சாதிக்கொரு சைற்றிலிருந்து
ஞாயிறு பூசை பார்த்து
பாவந் தீர்ந்ததெனப் பங்கிறைச்சி தின்று
கடன் திருநாள் கழித்தோமென்பர்.

பெருநாள் அவியலை மறுத்து
பசியில்லை
பகிர்ந்துண்ணப் பொசிப்பில்லை எனப்பசப்பி
வெள்ளாங் கோயில் தவிர்த்து
விருந்துண்ண மாட்டார்கள்.

குறிச்சிக்கொரு பள்ளிக்கூடம்
வீதிகள் பிரிக்கும் வீடுகள்.
கதைச்சுப் பேசலாம்
கவனம் கலக்கக் கூடாது
இரத்தமென்பர்.

வெளிநாடு வந்துமென்ன?
ஊரில் வெறுங்காணி விற்கச் சரிப்படாதென்பர்.
'வெள்ளாங் குடிமனையில் வேறையாட்கள் வாழுறதா?'
இலட்சங்கள் பெறுமதியற்று அங்கு சாதி எதிர் நிற்கும்.



படிப்பகம்

www.padippakam.com

இவர்கள்
அடையார்,கறுப்பி,கள்ளக் கறுவலென்று
பழிப்புச் சொல்வதிலும் விண்ணர்கள்.
உச்சமாய்
வெள்ளைத் தோல் துவேசத்திற் கொதித்துக்குமுறி
ரெஸ்ஸிசம் பெருகிய சமூகமென்று பதறும்,
சங்கக் கிணற்றில் வாளி கழற்றிய
கண்டறியாச் சமூகமிது.



## கடந்து கொண்டே கொன்றுவிடும்

பாதித்தூரத்திற் கண்விழித்தபோது
வாழ்வு,
வேலியோரம் பதுங்கி நடக்கும் பூனையாக
மெதுவாகக் கடந்து சென்று கொண்டிருந்தது.

அதுவொரு உதறலிற் கழற்றிய மயிர்களாக
காலடிகளிற் பறந்து கிடந்த சொச்சங்கள்
உயிரை உசுப்பின.

இடமூளை வலமூளை கசங்கி விரியாமல்
கண்கள் உக்கிப் போகப்போக
நித்திரையான கிழட்டுச்சவமெனத் திட்டி,
வாழ்தலின்
பாதியை எட்டிப்பிடிக்க மனமேங்கிப் பதறியெழ
சாவின் மணமறிந்து
கூர் சொண்டுகள்
குதறும் நகங்கள்
கிழித்துப் பிய்க்கும் பற்களுமாகப் பலவும்
செத்த உடலந் தின்னச் சுற்றி நின்றன.



படிப்பகம்

www.padippakam.com

# குருதி வடியப் புன்னகை

எனது முற்றத்திற் துப்பாக்கிச் சன்னங்களைக் குவித்தனர்.
கூரையிற் குண்டுகளை இறக்கி
ஒவ்வொரு தடவையும்
உயிர்களைத் தின்றனர்.

ஓடிய திசைகளெங்கும்
பீரங்கிகள் திரும்பிக் கக்க
பதுங்கும் கிடங்குகளில்
நிரம்பிய சடலங்கள் வழிவிட மறித்தன.

அவர்களோ
என்னைத் திரும்பிப் பார்க்காமல் ஓட வைத்தனர்.
இல்லையெனில்
என்னையொரு உப்புச் சிலையாக்கும் பலங்கொண்டிருந்தனர்.
அவர்கள்
கந்தகமும் நெருப்பும் மழையாய்ப் பொழியும் சூத்திரமறிந்தவர்கள்.

குண்டுகள் தின்று துப்பிய எச்சமாக நான் நின்ற போது
பெருங் குரலெடுத்துக் 'குடிமகளே' என்றனர்.
தடயமறியும் கால்களை மறைத்த வேட்டிகள் சரசரத்தன.
ஏந்திய வாட்களில்
சொட்டிய இரத்தம்
அவரவர் முதுகுகளிற் துடைக்கப்பட்டு(ச்)
சின்னங்களாகக் கிடந்தன.

என் மகனைக் கொன்ற எறிகணையின் பெருங் கூவலாக
எக்காளங்கள் முழங்க



வீதிகளில் நடந்து வந்தனர்.
மகளின் இரத்தம் தோய்ந்த ஆடை காய்ந்திட முன்னர்,
பட்டாடைகளைப் பரிசளிப்பதாக அறிவித்தனர்.
கஞ்சிக்கழுத
குழந்தையைப் புதைத்த கைநடுக்கம் நிறுத்தாதிருக்க
அவர்கள்,
கடைவாயில் ஒழுகிய குருதிக் கோடோடு புன்னகைத்தனர்.

இப்போது என்னையழைத்தனர்
'வாக்குப் போடுவதற்குக் கடமையுள்ள
அப்பாவிப் பிரசையே'



படிப்பகம்

www.padippakam.com

## அடையாள அட்டை

என்னுடைய பதினாறாவது வயதில்
ஒரு அடையாள அட்டையை,
சிறீலங்கா அரசாங்கம் தந்தது.

இது எதற்கெனக் கேட்டபோது, அம்மா சொன்னார்
'பரீட்சை மண்டபங்களிலும்
தேர்தலில் வாக்களிக்கவும் தேவைப்படும்'.

சில வருடங்களில்
புலிகளினாலொரு அடையாள அட்டை தந்தபோது
மீண்டும் ஏனென்று கேட்டேன்
'பயிற்சி எடுத்ததற்கு ஆதாரம்'.

பின்னும் மாதங்கள் கடந்து
சிறீலங்காவின் இராணுவமும்
அடையாள அட்டையொன்றைத் தந்தது.
அப்போது சொல்லப்பட்டது,
'ஆமிக் கட்டுப்பாட்டில் வாழ்வதற்கு அவசியம்'.

புகைப்படம்
இலக்கங்கள்
தேசிய இனம்
மாவட்டம்
ஆயுதங்கள்
சிறைகள் இவையில்லாத,
குட்டித் தீவொன்றைக் களவாடத் திட்டமிடுதல்.
பெரும் பறவையின் சிறகுகளுக்காக
வானத்தை அண்ணார்ந்து பார்த்தல்.

அடையாள அட்டையை அடிக்கடி மறக்கச்செய்து
அரைவழியில் வீடு திரும்பி வரக் காரணங்களாயின.



## அன்றிரவு செத்துப் போனேன்

தங்கள் கைகளைக் குலுக்கிக் கொண்டபின்
மேசையின் கீழே
அவரவர் கால்களை முட்டிக் கொள்ளாமல் நகர்த்தி வைத்தனர்.
மேலே அழகிய விரிப்பும் பூக்களும் வர்ண ஒத்திசைவோடு
வைக்கப்பட்டிருந்தன.
கைகளில் எழுதுகோல்கள் மட்டுமே ஏந்தியிருந்தனர்.
இவர்கள் சனங்களுக்காகப் பேசுவதாகச் சொல்லிச் சென்றனர்.
அவர்களுக்காக
தமது உயரங்களிலிருந்து கால்களையிறக்கிக் கதிரைகளில்
அமர்ந்தனராம்.
உதடுகளை அசைத்தனர்.
துப்பாக்கிகளற்ற இடுப்புகளைத் தடவிக் கொண்டனர்.
தம் நலன்களைப் பெரும் படுதாக்களில் எழுதி(ச்)
சுவர்களில் விரித்துக் கண்ணசைவுகளால் படிக்கச் சொல்லினர்.
கரண்டிகள் கத்திகள் சத்தமெழுப்பாது சாப்பிட்டு கைகளைக் குலுக்கி
நட்சத்திர விடுதிகளில் நித்திரை செய்தனர்.

அன்றிரவு தான் சிறையிலிருந்த நானும்
கைது செய்யப்பட்ட காரணமறியாது செத்துப் போனேன்.



படிப்பகம்

www.padippakam.com

## சொற்களைக் கண்டுபிடிப்பதைப் பற்றி........

ஆகாயத்தில் மினுமினுக்கும் சிலவற்றை(க்)
காகிதங்களிற் பரப்புதல்.
யாருமறியாக் குகையென்றிலிருந்து
கண்டெடுத்த அபூர்வச் சொற்களாகக் காண்பித்தல்.
பெருங்கடலிற் சலித்துச் சிலவற்றைச் சிதறவிடுதல்.
ஒருவருமறியாச் சொல்லென்றை
உருவாக்கலிற் துளிர்த்த வியர்வையுடன்
அதைத் தாளொன்றிற் கசியவைத்தல்.
அறியாதவொன்றை அலங்காரச் சொற்களாக்குதல்
வசனங்களை வரம்பு கட்டி மறித்தல்.
பலவும் கவிதையெனச் சொல்லிய பின்னர்
'ஒவ்வொரு பூவையும் நேசிக்கிறேன்
ஒவ்வொரு புல்லையும் நேசிக்கிறேன்'

கசங்கிக் கிடந்த துண்டொன்றில்
எழுதி விட்டுச் சென்றேன்.



## வெறும் வானம்

கொப்புகளிற் பனி படர்த்தி
வெறுங்குச்சிகளை மரங்கள்
கிளை விரித்து நிற்க
மூடிய சன்னல்கள் கதவுகள்
உறைந்த பனித்துகள்களாகிக் கூரைகள்.
விறைத்து
இறுகி நிலமெல்லாம் வெறுமை.
கண்கள் உயர்த்த
மாவு பூசிய வானம் நிறங்களை விழுங்கித் தொங்கியது.

ஒற்றைப் பறவையில்லை
காற்றிற் கிளம்பியலையும்
கடதாசி சருகில்லை
வீதி ஒன்றைக் கீறிச் செல்லும்
விமானங் கூட வானிலில்லை.

பாதி திறந்த
ஒற்றைச் சன்னலினூடே
விரக்தியில் வரைந்த ஓவியனின் காட்சியொன்றாய்
அப்பனியுறைவு கொழுவப்பட்டிருந்தது.

வெறுமை படர்ந்து வந்து
என் தோள் போர்த்த
தனித்திருக்கும் குளிர் பொழுதை
பாலைவனமொன்றில் பயணிப்பதாய்ச் சொல்லி
என் சன்னலின் ஓவியத்தை
மறுவளமாய்த் திருப்பியது.

நானொரு நாள் உப்பளத்தில் நின்றதையது
நினைவுறுத்துவதாயும்
சொல்லிச் சன்னலை மூடினேன்.



படிப்பகம்

www.padippakam.com

## சமாந்தரங்களாக வாழ்தல்

நிலத்தில் விலகிக்கிடக்கின்றோம்.
நமக்கிடையேயுள்ள தூரம்
பிரிப்பதற்கும் இணைப்பதற்கும்.

வளைவுகளும் நேர்களுமாகப் பாதைகளைக் கொண்டு
பல்லாயிரங் கைகளைப் பற்றிப்பிடித்தவர்களாகப் பயணிக்கின்றோம்.
குறுக்கே இணைப்புகள்
விலகலின் தொடுகைகள்.

கைகளைப் பிணைத்தவர்களாக
எப்போதும் சமாந்தரங்களில் நீளச்சென்று
பயணங்களின் இலக்குகளைச் சுமத்தலும்
விலகிச் சிறு தூரத்திற் கிடத்தலும்
நெருப்பில் உருகி வளைந்து
இரும்புத் தண்டவாளங்களாயிருக்கும்
எம் இயல்பே.



## மதுக்கோப்பை

இறுதிக் கோப்பை மது பற்றி,
கடைசி மிடறைத் துளி சிந்தாமல்
சுவைத்து
அது தொண்டையிலிறங்கிக் கரைந்து போவதை
கவிஞர்களும் மதுவருந்தித் திளைப்போரும்
வருணனை செய்வர்.

அவர்கள்
மதுவின் முதல் மிடறை இரசித்தறியாத மடையர்கள்.

முதற் தூக்குதலில்
தோழமைக் கிண்ணங்களின் உரசலோடு
கோப்பையை முத்தமிடாதவர்கள்.

காதலைச் சொன்ன ஒரு நாள் போல்
அது வெப்பத்தை உணர்த்தும்.

புதியதொரு முத்தத்தையொத்த
முதற் கோப்பை மதுவிற் கிளர்ச்சியடையாதவர்கள்.
வெற்றுப் போத்தல்களை வீசும் வரை
போதையைச் சுகிக்காதவர்களாய்
கடைசிக் கிண்ணத்திற் கரைந்திடுவர்.

பியர் நுரைகளில்
வைன் நனைந்த உதடுகளின் புளிப்பில்
கள் அருந்திய மிதப்பில்
ரக்கீலா,வோட்கா,விஸ்கி,பிராந்தி மற்றும் பலவும்
இதமான தீயாய் வருடிச் செல்லும் கிறக்கத்தில்
பாடல்களிசைத்துத் தாளங்கள் தட்டும் குழாமிலிருந்து
இசைகள் பொங்கும் கோப்பையின்
முதற் துளியை உதடுகளில் மீட்டாதவர்கள்,
கடைசிக் கோப்பை பற்றிக் கதைப்பர்.



படிப்பகம்

www.padippakam.com

## வடிவில்லாத மழை

குளிர்ச்சியான மாலைப்பொழுதொன்று
ஆரம்பிக்கும் அறிகுறி.
வெற்று வானத்தில்
சாம்பல் முகில்கள் ஓடியும் கூடியும்
உலவிக் குலவின.

காற்று மரங்களைச் சிலுப்பி வீச
வெக்கை தணிந்து
மெதுவாகத் துளிகள் வீழ்ந்து
வேகமெடுத்துப் பெய்தது.

சன்னற் திரை விலக்கி
அந்திமழை பொழிகிறது முணுமுணுத்து
அதை இரசித்தாள்.
மகனடித்த பந்து முதுகிற் பட்டுத் திடுக்கிட்டு
ஓடிவா ஓடிவா மழை பெய்யுது மகனே
சன்னற் கண்ணாடியால் பார்த்தவன்
சற்றும் பிந்தாமல் கேட்டான்
எல்லேரும் வேலைமுடித்துக் குடைபிடித்து
வீடு போக,
என் அப்பா இன்னும் ஏன் வரவில்லை?

துமிகளைத் தூவி முடித்தது மழை.



## தீர்ந்திடாத போதினிலே

கடலாயிருந்தால்
சிப்பிக்குள் ஒழித்து வைத்த மழைத்துளியாய்
நேசத்தை மறைப்பேன்.

இலையுதிர்கால மரமாயிருப்பின்
காற்றில் உதிர்த்து
மக்கிடச் செய்வேன்.

இல்லையொரு சூனியக்காரியாயிருப்பின்
ஒற்றைப் பெரு விரலிலோ
உச்சி மயிர்க் கற்றையிலோ
சேமித்து காவலிருப்பேன்.

காற்றாய் மரமாய் மலராய் நானில்லை
காதலும் காமமுமாகக் கனவுகளைப் புனைந்து
பிதற்றும்
தந்திரமறியாத் தாகியிவள்.



படிப்பகம்

www.padippakam.com

## தனிமை

சாரல்களாக மழையிறங்குதல்
மெதுமெதுவாகக் கடலினுள்
கால்கள் உள்ளிழுத்தல்
எதுவென்றறிய முடியாத ஒன்றாயிருந்தது.

உன்னைத் தேடுதலில்
நானொரு ஆழத்தில் அமிழ்தலும்
புத்துயிர்ப்பாய் விரிதலும்
எவ்வகையடங்கும்?

காதுகளில் மிதக்கும் வார்த்தைகள்
உட்பரவி சிறகுகள் வளர்க்கும்
சில போது
கூராய் ஊடுருவிச் சிறுநெருப்பொன்றைக் கொழுத்திவிடும்.
கடத்திக் கலைபட்ட நாயாகப் பூனையாக
மீளப் படலையோரம் பதுங்கிக் கிடக்கும்
கொடுமை செய்யன்பு.

ஆயினும்,
மோதும் முகில்கள்
மெதுவாகக் கலைந்து செல்லுமொரு காட்சியாக
அது,
எங்ஙனம் சிதறிப் போகின்றது? மெல்லென வீசிய காற்றொன்றில்
மிதந்ததொரு இறகாக
நம் கைகளினின்று
அது,
விலகிப் பறக்கின்றது.
ஒரு குறைக் கனவின் காட்சிகள்
புகார் பரவி
நினைவிலிருந்து அழிந்து கொண்டிருக்கிறது.

மிக இயல்பாக
வழி நடந்து போகின்றது
நமக்கிடையிலான நேசம்.
சுற்றி நிறைந்திருக்கும் காற்றாக
சூழ்ந்திருக்கிறது.
பெருங் கொடுமை செய்யுந் தனிமையது.



படிப்பகம்

www.padippakam.com

## மீட்டுச்சென்றது

●

பெரும் புயலொன்று
ஒரு மரங் கூட அசையாமலிருக்க(த்)
தன்னந் தனியே வாரிச் சென்று வீசியது.

கரைந்து சூனியமாகிப் போக(க்)
களவாடிச் சென்ற காற்று,
வெற்றுப் பெயராகிய அதை
வார்த்தைகளைத் தீத்தி விடும் நாவால்
வடிவஞ் செய்து
மனசை விரித்து
அன்பு செறி கரங்களால்
ஒன்றாக்கிச் சுழற்றி
புதிதாய் செய்து
மீட்டுக் கொடுத்தவுருவை
மாயாவென்றழைத்தது.

தேடியலைதலில்
தோற்றுச் செத்த உயிரை
மீள் பிறத்தலின்
தாயாகிய புயலது.

சாவில்
வெறுமை இறுகிய கூடாகிக் கிடந்ததை
உரசிச் சென்று
வெப்பங் கனல அனல் தடவி
ஈரச் சிதறலில் உடல் பரப்பி
ஒரு பொழுதில்,
சிறு புள்ளியொன்றிற் கைப்பற்றி
புயலாய் விழுங்கிப் புதிதாக்கித் துப்பியது.
மாயாவாகிய நானானேன்.



## ஆயுதம் வைத்திருப்பவன் நாசமாகப் போகட்டும்

●

இவ்வளவு குழந்தைகள் சாவு
இத்தனை குழந்தைகள் காயம்
செய்தி படித்து முடித்து
ஆற்றாமையில் ஐயோ சொல்லி
வேறென்ன செய்வோம் என்போம்
விட்டகதை தொடருவோம்.

அவை என் குழந்தைகளானால்
கற்பனை செய்தால்
இரவு முழுவதும்
கண்கள் மூடாயின.

பேசத் தொடங்காத மழலைகள்
யுத்தம் புரியாத குழந்தைகள்
அரசியல் அறியாச் சிறுவர்கள்
ஆயுதங்கள் மிரட்டும் போதெல்லாம்
அஞ்சி நடுங்கி
எதை நினைத்து அலறுவர்?

குண்டுகள் வானிலிருந்து கொட்டும்
வெடித்துச் சிதறி
இரத்தம் வழிய குழந்தைகளும்
பெற்றோர், உற்றார் பிணங்களாய் விழ
வழி தெரியாது மிரண்டு திகைத்தவர்கள்.

படுத்த பாயில் சுடப்படும் போது
கழுத்தில் சுருக்கிட்டு கொல்லப்படும் நேரம்
பயணிக்கும் வாகனம்
திடீரென அதிர்ந்து சிதற
ஏனென்று அறியாது குழந்தைகள்
அச்சமும் வேதனையும் அவர்களை.....
இட்டு நிரப்ப வார்த்தையில்லை.



படிப்பகம்

www.padippakam.com

## தலைப்பு என்ன?

●

என்னிடமிருந்த சொற்கள்
தொலைந்து போயின.
என் மூளை சேகரித்த எழுத்துகள்
கண்ணாடியொன்றில்
மாறுபட்ட பிம்பங்களாகத் தொங்குகின்றன.
சில சொற்கள் ஞாபகங்களிலிருந்து பிய்க்கப்பட்டு(த்)
துண்டுகளாக மிதந்தும் எனைச் சுற்றி அலைகின்றன.

எவராவது சொற்களைக் கண்டு பிடித்து
என்னிடம் கையளிப்பீராக.
அல்லது
ஒரு காதலைக் கிளர்த்தி கவிதையைத் துளிர்க்கச் செய்வீராக.
தனித்த என் நிழலுடன்
இன்னுமொரு உருவாக
காற்றில் பறக்கும் தலைமுடி
தோள்களிற் படரும் நெருக்கமுடன்
கரங்களிறுகப் பற்றி கதை பேசிச் சென்று
மீட்டுத் தருமொரு கையையுடையவராக,

கொடுங் கதைகளறிந்து
வெந்து கொண்டிருக்கும் நினைவுகளிலிருந்து
என் நெஞ்சைப் பறித்து
நினைவுகளைச் சீராக்கி
காவு போன சொற்களைக்

கூட்டியள்ளி என் மேசையிற் குவித்து வைப்பீராக.
களைத்துப் போன மூளை கள்ளமாய்ச் சொல்கிறது
உறக்கமாம்.
கன்றையீணக் கதறும் கருப்பையைக் கொண்ட
பெண்ணுயிராகப் பாரஞ் சுமந்து
இறக்கி வைக்கசொற்களைத் தேடுகின்றேன்.



## முற்றுப்புள்ளியற்ற

●

வார்த்தைகள் வாக்கியங்கள் வரட்சியாகி(ச்)
சொற்கள் தீர்ந்ததாக
நீ சொல்லும் போதும் அவை
முற்றுப்புள்ளியை எட்டாது
தொடரும் வார்த்தைகளுடன்
பேசிச் சிரித்து வாதித்து
அழுதும் அரட்டியும்
விரட்டியபடியவை பின்னே வந்து
என் கண்கள் களைத்த துயிலில்
தலையணைக்கீழ் ஒழிந்து
விழிக்கையில்
வேகமுடன் தொற்றிப் பற்றிடுகையில்
முற்றுப்புள்ளியற்ற நமதுரையாடலில்
உந்தன் குரலற்ற வெளி நீண்டு செல்ல(க்)
கோடிட்ட இடங்களை அவ்வப்போது நீ நிரவிட - அவை
முற்றுப்புள்ளியை எட்டாது
தொடர்ந்தும் நமதுரையாடலில்.



படிப்பகம்

www.padippakam.com

## அது அவ்வாறே ஆனது

●

நறுமணம் வீசும் பூக்கள் என்றும்
மீனென்றும் மானென்றும் சொல்வர்.
நிலவென்றும் கனிகளைக் காய்களை உவமித்தும் பாடுவர்.

பொய்கள் வாய்களில் வழிய வழிய
அவளுடலைப் புகழ்வார்கள்.

கசந்து போன வார்த்தைகளைக் குப்பையிற் தள்ளி,
உயிரினங்களில்
நானொரு மனிசியென்றாள்.

தனதுடலைத் தழுவிக் கொண்டு
பெயர் சொல்லிப் பாடினாள்.

பொய்யை விடப் புளுகை விட
அவ்வாறே அவையென்றாள்.

வருணனைகள்
மறுதலிக்கப்பட்ட சினத்தில்
தங்கள் பேனை முனைகளைக் கூர் செய்து
உதடுகளைத் தைத்திடவும்
தங்கள் எழுதுகோல்களினால்
விரல்களை உடைத்திடவும் சபதஞ் செய்து
பவித்திரமும் பண்பாடும் பறப்பதாகப் பரிதவிப்பார்கள்.



## செத்தவை சாகாதவை மற்றவையும் விடுப்புப் பார்த்தல்

●

தனக்கொரு நாடு தேவையென்று
வீடுகளிலிருந்து ஓடிப்போன
புதல்வர்
வெளி நாடுகளிலிருந்து திரும்பியிருந்தனர்.

'சமையல் செய்தல்
துடைத்துக் கழுவுதல்
எதுவும் இளக்காரமில்லை'
அடிக்கடி சொல்லிக் கொண்டிருந்தனர்.

எல்லைகளிற் புங்கு பூவரசு கிளுவை நட்டு
தரவை நிலங்களை
உழுது விதைக்காத பிழைக்கு வருந்தி
புற்கள் கிளறி உரம் வீசி
ஓய்வெடுக்கக் கடற்கரைகள் உண்டென்று
இப்போது கண்டதாகக் கவலையடைந்தனர்.

குறிஞ்சா,
முருங்கையிலைகள்
தமிழ்க்கடையில்
எக்கச்சக்க விலையென்று இருவேளை உண்பர்.

தமது ஊதிப் போன வயிறுக்கும்
உதிர்ந்து விட்ட தலைமயிர்களுக்கும்
அடிக்கடி காரணங்கள் சொல்லிக்கொள்வர்.

பக்கத்து வீட்டுப் பொடியன்
ஆமி பிடிச்சுக் காணாமல் போனது
ஷெல் விழுந்து பள்ளிக்கூடம் உடைந்து
சிதறிச் செத்துப் போனவர்கள்,



படிப்பகம்

www.padippakam.com

பின் வளவுக்காரிக்கு ஆரோ வெடி வைச்சுக் கொன்றது
புலி விசாரிக்கக் கொண்டு போய்
வீடு வராத சனங்களுமென்று
கதைகளாகச் சொன்னபோது,
வாயிலிருந்து ஆ....ஆ என்றொரு சத்தத்தில்
ம்கும்..எனும் தலையாட்டலில்
எல்லாம் தாண்டிச் சென்று இடைவெட்டி
குளிருக்கு விறைத்த விரல்களாம் ஞாபகத்தில் நீவி,
எங்கள் 'செப் 'என்று
கதையொன்று சொலலி
நேரச்சிக்கலில் நித்திரை குழம்புவதாக முறைப்பாடு செய்வர்

அம்மாவுக்குத் தலையெல்லாம் வெள்ளையெனவும்
அடிக்கடி அவள் வயசும் கேட்டு'அப்பிடியா' என்பர்.

மேலுமொரு
விடுமுறைக்காலம் வீணாகிப் போவதை நினைத்து
தம் நாடி தடவி நாக்குக் கடித்துச் சிரிப்பர்.

பலருக்கான கதையொன்றை எவரும் நடிப்பர் .
நடிப்புத் திறமை எல்லோருக்கும் உண்டாம்.



படிப்பகம்